[1974 சனவரி 25

ராஜராஜசோழன் சிலை

*153 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலுள்ள ராஜராஜசோழன் சிலையைப் பாதுகாக்க மண்டபம் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ராஜராஜசோழன் சிலையை பாதுகாப்பாக வைக்க அரசாங்கம் இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா? அதற்காக மேற்கொள்ளப்பட்ட பணி என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தச் சிலை ஓரளவு நகராட்சி மன்றத்தின் பொறுப்பில்தான் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலைக்கு கருங்கல் படிக்கட்டு, ரதபீடம் அமைத்தல் முதலிய வேலைகளை ரூ. 21,000 செலவில் மகாபலிபுரம் அரசு சிலை வடித்தல் பயிற்சி மையத்தின் மூலம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை மகாபலிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. பெரிய மண்டபமாகக் கட்டினுல் அதற்குப் பின்னுல் உள்ள பெரிய கோவில் அதனை ஒட்டிய சரித்திரச் சான்றுகள் மறைபடும். ஆகவேதான் இந்தச் சிலையை ஒட்டி ஒரு பூங்கா அமைத்து சிலைக்கு கருங்கல் படிக்கட்டு, ரதபீடம் அமைப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

முத்துசாமி தீட்சிதருக்கு நினைவுச்சின்னம்

*154. வினு—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரத்தில் திரு. முத்துசாமி தீட்சிதருக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1974 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

குற்றாலத்தில் சுற்றுலா மாளிகை

***155 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றாலத்திற்கு வரும் ஏழை, நடுத்தர மக்கள் வசதிக்கென விடுதிகளைக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கும் தங்க வசதிகள் உடையதாயிருக்கும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டவிருக்கும் சுற்றுலா மாளிகை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்தக் குற்றாலத்தில், நீர் விழ்ச்சி ஏற்படும் காலத்தில் ஒழுங்காகக் குளிக்க வசதியில்லாமல் இருக்கிற காரணத்தினால் அந்த அருவியின் ஓட்டத்தில் ஐயருவி போன்ற இடங்களில் எல்லாம் செயற்கை நீர்விழ்ச்சிகளை ஏற்படுத்தி, நெருக்கடியின்றி எல்லோரும் அதில் நீராடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்போதே அங்கே வசதியாக நீராட நகரியம் பல்வேறு திட்டங்களைச் செய்து வருகிறது. பழைய அருவி, புதிய அருவி, ஐயருவி, சிற்றருவி, புலியருவி ஆகியவற்றுக்கு ஆண்டாண்டு அதிகமானபேர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நடுத்தர, ஏழை எளியவர்கள் அங்கே தங்க வசதியினை ஏற்படுத்தும் வகையில் சுற்றுலா வாரியம் 10 லட்சம் ரூபாயில் விடுதி ஒன்றினைக் கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறது.

Harijans of Paramakudi Emaneswar village

***160 Q.—Thiru K. T. K. THANGAMANI :** Will the Hon the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that Harijans of Paramakudi Emaneswar were beaten and tortured during second week of June 1973;